**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,**
**SIRKALI**
**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
**Case No. C.C. No.273/2021**

| | | | |
|---|---|---|---|
| Deposition of | | Prosecution: | P.W-5, L.W- 1 |
| Name | : Gobinath (Forest Range Officer) | Defence | : |
| Father Name | : Vasudevan | Court | : |
| Village | : Trichy Forest Office | Taluk | :Sirkali |
| Calling | : | Religion | : |
| Age | : 47/2022 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 01.07.2022.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி வனச்சரகத்தில் வனசரக அலுவலராக பணிபுரிகிறேன்.வழக்கு சமயத்தில் நான் சீர்காழி வனச்சரகத்தில் வனசரக அலுவராக பணிப்புரிந்தேன். கடந்த 30.09.2016 அன்று காலை 10. மணியளவில் சீர்காழி கணபதி நகர் அருகில் சீர்காழீ விவேகனாந்தா பள்ளி வீட்டின் அருகே சந்தேகப்படும்படியாக நபர் இருச்சக்கர வாகனத்தில் இருந்ததை கண்ட எனது வன சிப்பந்தி திரு பாலசுப்பிரமணியன் வனவர் தலைமையிலான தனிப்பிரிவினர் சோதனை செய்தனர். அப்போது வாகனத்தில் இரண்டு புள்ளி மூக்கு வாத்துக்கள் வேட்டையாடி வைத்திருந்தது தெரியவந்தது. எதிரியிடம் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மகசர் தயார் செய்யப்பட்டது. பின்னர் வாத்துகளை வேட்டையாடியது குற்றம் என தெரிவித்து எதிரியை மேல்நடவடிக்கைகாக வனசரக அலுவலரிடம் கொண்டு வந்து விசாரிக்கப்பட்டது- விசாரணையில் ஆஜர் எதிரி மயிலாடுதுறை வல்லவராயன் பேட்டையை சேர்ந்த முத்துக்குமார் என்பது தெரியவந்தது.. வேட்டைக்கு பயன்படுத்திய இருச்சக்கர வாகனம் மற்றும் ,இரண்டு வாத்துகள் H-நமூனா பதிவு செய்து குற்ற அறிக்கை தயார் செய்யப்பட்டது. வனக்சரக குற்ற எண் 2/2016 பதிவு செய்யபட்டது. அதனை தொடர்ந்து படிவம் 95 தயார் செய்யப்பட்டு அடைப்பு காவல் அறிக்கையுடன் எதிரியை மருத்துவ பரிசோதனை செய்து நீதிமன்ற

காவல் அடைப்புக்காக சீர்காழி நீதித்துறை நடுவர் முன் ஆஜர் படுத்தப்பட்டார். இந்த வழக்கில் விசாரணை அலுவலராக இருந்த நான் ஆவணங்களின் அடிப்படையில் குற்றத்தாள் A Form தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன். **அந்த ' A '- Form அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**இத்துடன் புகார்தாரர் தரப்பு சாட்சிகள் முடித்துக்கொள்ளவதாக கேட்டுக்கொண்டதற்கிணங்க புகார்தாரர் சாட்சியம் முடிக்கப்பட்டது.**